00198

இலங்கைத் திறந்த பல்கலைகழகம்
சமூக மற்றும் விஞ்ஞான பீடம்
விஞ்ஞானத்தில் இளங்கலைமாணி பட்டம் – (2020/2021)
இறுதி பரீட்சை - (மட்டம் III) (பருவம் II)
**DSU3298** - இலங்கை சமூகம் - அறிமுகம்
காலம் : இரண்டு மணித்தியாலம் (02 மணித்தியாலம்)

திகதி : 4.12.2021

நேரம் : 1.30 p.m. – 3.30 p.m.

நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடயளிக்குக. ஒவ்வொரு வினாக்களுக்கும் 25 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

1. "விவசாய இரசாயனங்கள் மற்றும் உரங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட மொத்தத் தடையானது, இயற்கை விவசாயத்தில் விவசாயிகளை ஈடுபட செய்வதற்க்கான தூண்டுதல் வழியாகுமா? " சமகால இலங்கை சமூகத்தின் பின்னணியில், "மஹா" பருவ சாகுபடிக்கு உரம் கோரி நடைபெற்று வரும் போராட்டம் ஒன்றில் ஒரு சாதாரண விவசாயி எழுப்பிய இந்த கேள்வியை ஆராயுங்கள்.

2. சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கால் (Xi Jinping) அறிமுகப்படுத்தப்பட்ட 'புதிய பட்டுப்பாதை' 'One Belt One Road (OBOR)', திட்டம், ஆசிய, ஆபிரிக்க மற்றும் ஐரோப்பாவின் பிராந்தியங்களில் சிதறிக் கிடக்கும் பல்வேறு நாடுகளிடையே இணைப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஒரு ஈர்க்கக்கூடிய பொருளாதார வளர்ச்சி மற்றும் வணிகத் திட்டமாகும். தெற்காசியாவில் சீன காலனித்துவத்தை நிறுவுவதற்கான ஒரு வழியாக இதை கருத முடியுமா? ஆராய்க.

3. வரவு செலவுத் திட்டம் மீதான சமீபத்திய பாராளுமன்ற விவாதத்தின் போது, "இலங்கை சமூகத்தின் மீது போர்த்துகீசிய காலனித்துவவாதிகளை விட பிரித்தானியர்களால் இலங்கைச் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட தாக்கம் மிகவும் அதிகமாக இருப்பதால், அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்களால் நாம் இன்னும் ஆளப்படுகிறோம்" என்று கூறப்பட்டது. இந்த கருத்தை ஆராய்க.

4. "கண்டி இராச்சியத்தின் நில உரிமை முறைமையானது, அரசியல்வாதிகள் தலைமையிலான அபிவிருத்தியினால் உருவாக்கப்பட்ட நவீன தற்காலிக குடியேற்றங்களை விட சிறந்தது". இந்த அறிக்கையுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்கள் கருத்துக்களை விவரிக்குக.

5. குறிப்பிட்ட உதாரணங்களை மையமாகக் கொண்டு இலங்கை சமூகத்தின் பல மத, பல இன மற்றும் பல கலாச்சார இயல்பை விளக்குக.

6. இலங்கையை அடிப்படையாக கொண்டு சுற்றுச்சூழலைச் சுரண்டுவதற்கும் அபிவிருத்தி நோக்கங்களுக்கும் இடையில் சமநிலையை பேணுவதன் முக்கியத்துவத்தை இனங்காண்க.

********Copyrights Reserved*********